IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | EA.53/2021 in E.P.No.27/2008 | | |
| | | P/W's | : | 1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | G. Ramesh | CASTE | : | |
| S/O. / W/O. | | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **22-07-2022**

## CHIEF EXAMINATION :

நான் இம்மனுவில் 3ம் தரப்பினர் ஆவேன். மேலும், இந்த மனுவில் 1வது மனுதாரர் ஆவேன். இம்மனுதாரர்கள் தரப்பில் 1வது சாட்சி ஆவேன். மேற்படி வழக்கில் எனது தரப்பில் பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமான வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் யாவும் உண்மை என்றும், அதில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றும் உளமாற உறுதி அளிக்கிறேன். என்னால் அளிக்கக்கூடிய சாட்சியம் மற்றும் ஆவணங்கள் உண்மையானவை என உறுதியளிக்கிறேன்.

முதல் விசாரணை (ம.சா.1 ஆஜர்.) சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.

| வ.எண் | தேதி | ஆவணங்கள் | குறியீட்டு எண் |
|---|---|---|---|
| 1 | 17.12.2012 | நானும், 2ம் மனுதாரும் சேர்ந்து ராமானுஜம் என்பவரிடம் இருந்து இந்த மனுவில் கண்டுள்ள சொத்தை கிரையம் வாங்கப்பட்டுள்ளதற்கான அசல் கிரைய பத்திரத்தினை தாக்கல் செய்கிறேன். | ம.சா.ஆ,1 |
| 2 | 24.04.2000 | ம.சா.ஆ.1க்குண்டான மூல ஆவணமான ராமானுஜம் என்பவர் பூமிநாதன் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கியதற்கான கிரைய பத்திரத்தின் மூல அசல் பத்திர ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். | ம.சா.ஆ,2 |
| 3 | 21.08.2000 | ராமானுஜம் அவர்களுக்கு செல்லம்மாள் வகையறாக்கள் எழுதிகொடுத்த கிரைய பத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். | ம.சா.ஆ.3 |
| 4 | 24.06.1953 | ராமானுஜம் செட்டியார் பாரிசுப்பம்மாளுக்கு இந்த எதிர்மனுதார்களின் முன்னோர்கள் சுப்பம்மாள் எழுதிகொடுத்த ஒத்தி பத்திரத்தின் அசலை தாக்கல் | ம.சா.ஆ.4 |

| | | | |
|---|---|---|---|
| | | செய்கிறேன். | |
| 5 | 11.12.1954 | ராமானுஜ செட்டியார் மனைவி சுப்பம்மாளுக்கு காமாட்சி பிள்ளை மனைவி சுப்பம்மாள் வகையறா சேர்ந்து எழுதிகொடுத்த கிரைய பத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். | ம.சா.ஆ.5 |
| 6 | 02.05.1956 | ஆராயி அம்மாளுக்கு சுப்பம்மாள் எழுதிகொடுத்த கிரைய பத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். | ம.சா.ஆ.6 |
| 7 | 24.09.1966 | பங்காரு அம்மாளுக்கு சுப்பம்மாள் வகையறா எழுதிகொடுத்த கிரைய பத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன் | ம.சா.ஆ.7 |
| 8 | 21.06.1968 | இம்மனு சொத்தின் ஒரு பகுதியை பொறுத்து பங்காரு அம்மாளுக்கு லிங்கம்மாள் வகையறா எழுதிகொடுத்த கிரைய பத்திரத்தின் அசலை தாக்க் செய்கிறேன். | ம.சா.ஆ.8 |
| 9 | 23.10.2021 | சர்வே எண்.13/20 சொத்திற்கு என் பெயரிலும் எனது மனைவி பெயரிலும் உள்ள கணினி பட்டாவின் இணைய தள கணினி ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். | ம.சா.ஆ,9 |
| 10 | | இம்மனுவின் அசல் வழக்கான O.S.54/2003 வழக்கின் பிராது நகலின் சான்றிட்ட ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். | ம.சா.ஆ.10 |
| 11 | | IA.122/2003 in O.S.54/2003 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் ஆகியவற்றின் சான்றிட்ட ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். | ம.சா.ஆ.11 |
| 12 | 01.07.1954 | அசல் நிறைவேற்றுதல் மனு சொத்தின் 1, 2, 3 லக்க சொத்துக்களின் பகுதி சொத்தினை பொறுத்து காமணபிள்ளை மற்றும் ஆதிமூல பிள்ளை ஆகியோர்களால் சீதையம்மாளுக்கு கிரையம் செய்து கொடுக்கப்பட்ட கிரைய ஆவணத்தின் இணையதள கணினி ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். **(மேற்படி ஆவணம் ஏற்கனவே EA.55/21 மனுவில் விசாரணை செய்யப்பட்டு, தள்ளுபடி செய்யப்பட்ட அதே ஆவணத்தை பொறுத்து மீண்டும் தாக்கல் செய்யப்பட்டதாக ஆட்சேபணை செய்யப்பட்டு, ஆட்சேபணைக்குட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்பட்டது)** | ம.சா.ஆ.12 |
| 13 | 15.10.1954 | காமணபிள்ளையின் சிறிய தந்தை ராமசாமி பிள்ளை வகையறா குருசாமிரெட்டி என்பவருக்கு எழுதிகொடுக்கப்பட்ட கிரைய பத்திரத்தின் இணையதள கணினி ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். **(மேற்படி ஆவணம் ஏற்கனவே EA.55/21 மனுவில் விசாரணை செய்யப்பட்டு, தள்ளுபடி செய்யப்பட்ட அதே ஆவணத்தை பொறுத்து மீண்டும் தாக்கல் செய்யப்பட்டதாக ஆட்சேபணை செய்யப்பட்டு, ஆட்சேபணைக்குட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்பட்டது)** | ம.சா.ஆ.13 |
| 14 | 19.08.1965 | எதிர்மனுதார்களின் முன்னோர்களான காமணபிள்ளை வகையறாவால் நீரேத்தான் பஞ்சாயத்து போர்டுக்கு | ம.சா.ஆ,14 |

| | | | |
|---|---|---|---|
| | | பேருந்து நிலையத்திற்காக வெங்கிடசாமி ரெட்டி வகையறாவுக்கு எழுதி கொடுக்கப்பட்ட கிரைய பத்திரத்தின் இணையதள கணினி ஆவணம் தாக்கல் செய்யப்படுகிறது. | |
| 15 | | ம.சா.ஆ.14க்கு மூல ஆவணமான 19.08.1964ம் தேதியிட்ட ஒப்பந்த பத்திரத்தின் இணையதள கணினி ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். | ம.சா.ஆ.15 |
| 16 | | 01.04.1962 முதல் 31.12.1974 வரை கால கட்டத்திற்குண்டான இந்த மனு சொத்திற்கு உள்ள வில்லங்கம் தொடர்பான வாடிப்பட்டி சார்பதிவாளரால் கொடுக்கப்பட்ட வில்லங்க சான்றினை தாக்கல் செய்கிறேன். | ம.சா.ஆ.16 |

மேற்படி ஆவணங்களையும் வாக்குமூலத்தையும் ஏற்றுக்கொண்டு தக்க உத்தரவு பிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

**<u>கு.வி (எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில்) :</u> 22-07-2022**

நீங்கள் என்ன மனு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் மனு சொத்தானது எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்காக ஊர்ஜிதம் செய்ய மனு தாக்கல் செய்துள்ளேன். உங்களுக்கு எந்த புல எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் பாத்தியம் என்றால் பழைய சர்வே எண்.13/7பி, புதிய சர்வே எண்.13/20 அதில் நடைபாதை தவிர 4 3/4 செண்ட் எனக்கு பாத்தியப்பட்டது ஆகும். பிரமான வாக்குமூலம் யாரால் தயார் செய்யப்பட்டு போடப்பட்டது என்றால் என்னால் சொல்லப்பட்டு என்னுடைய வழக்கறிஞர் மூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உங்களால் தாக்கல் செய்யப்பட்ட இநத மனுவில் பரிகாரம் காலத்தில் S.P. காந்திக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து உங்களுக்கு பாத்தியம் என்று பரிகாரம் கேட்டிட எதன் அடிப்படையில் உங்களுக்கு அதிகாரம் உள்ளது என்றால் எனக்கு பாத்தியப்பட்ட மனு சொத்தில் நான்கு எல்லைகளில் காந்தி ஒரு தரப்பினர் வருகிறார். நீங்கள் அவ்வாறு மனுவில் பரிகாரம் கேட்கவில்லை என்றும், இந்த மனுவில் மனு அட்டவணை சொத்தில் 3ம் தரப்பினரான S.P. காந்தி அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக இந்த எதிர் மனுதாரர்கள் / வாதிகள் தாக்கல் செய்த அசல் நிறைவேற்றுதல் மனுவில் தள்ளபடி செயய்வேண்டும் என்று கேட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமான எதிர் மனுதாரர்கள் / வாதிகள் அசல் வழக்கு எண்.54/2003ல் யார் யாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண்.54/2003ல் எதிர்மனுதாரர்கள் /

வாதிகளால் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை. பிரதிவாதிகள் சுப்ரமணிய ஐயர் மற்றும் சேதுராமன் இருவரும் தாவா சொத்திற்கு சம்பந்தமில்லாதவர்கள் என்று சொல்லியுள்ளீர்கள். எதன் அடிப்படையில் அவ்வாறு சொல்லியுள்ளீர்கள் என்றால் எங்களுடைய சொத்து வேறு, அதேபோல் சேதுராமன் மற்றும் சுப்ரமணிய ஐயர் சொத்து வேறு ஆகும். அசல் நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்யப்பட்ட விபரம் உங்களுக்கு எப்போது தெரியும் என்றால் நீதிமன்றத்தில் இருந்து ஆணையரால் சொத்தை ஒப்படைப்பு செய்ய வந்தபோது தான் தெரிய வந்தது. எதிர்மனுதாரர்கள் / வாதிகள் முறைகேடு செய்யப்பட்டு சொத்தை அபகரிக்க வந்ததாக நீங்கள் சொல்வது முற்றிலும் தவறு, நீதிமன்ற ஆணையர் மூலம் சொத்தை வசம் எடுத்திட வரப்பட்டுள்ளது என்று சொன்னால் அது தவறு. நீங்கள் இந்த மனு சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு கிரைய சொத்தில் முன்னோர்கள் எத்தனை வருடங்களாக இந்த மனு சொத்தில் அனுபவத்தில் இருந்தார்கள் என்றால் சுமார் 35 வருடங்கள் இருந்திருப்பார்கள். 2003 கால கட்டத்தில் தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்ய வந்தபோது சொத்தில் யார் இருந்தார்கள் என்றால் என்னுடைய முன்கிரையதாரர்கள் இருந்தார்கள். எனக்கு ஞாபகமில்லை. நீங்கள் எப்போது சொத்தை கிரையம் வாங்கினீர்கள் என்றால் 2012ம் வருடம் ஆகும். 2013ம் வருடம் தாவா மனு சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட வரும்போது நீங்கள் ஆட்சேபணை செய்தீர்களா என்றால் எனக்கு எந்த வித அறிவிப்பும் வரவில்லை. 2013ம் வருடம் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்திற்கு வந்தபோது நீங்கள் இருந்தீர்களா என்றால் இல்லை. ஆகையினால், நீங்கள் 2012ம் வருடம் தாவா மனு சொத்தை கிரையம் வாங்கியதாக சொல்வது முற்றிலும் பொய், அதேபோல 2013ம் வருடம் தாவா சொத்தில் நீதிமன்ற ஆணையர் பார்வையிட வந்தபோது இல்லை என்று சொல்வதும் பொய் என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல. எதிர் மனுதாரர்கள் / வாதிகளுக்கு பாத்தியப்பட்ட தாவா மனு சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் உங்களால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உங்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கது அல்ல, உங்களை மனு சொத்தில் இருந்து வெளியேற்றிய பிறகு தான் இந்த மனு தாக்கல் செய்திட உங்களுக்கு அருகதை உள்ளது என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல. நீங்கள் தீர்ப்பு கடனாளி அல்ல மனு சொத்தில் உங்களுக்கு எந்தவித உரிமையும் இல்லாத நிலையில் இந்த

மனு தாக்கல செய்திட உங்களுக்கு அருகதை இல்லை என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல. உங்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவிற்கு நான்குமால் என்னவென்றால் இந்த மனுவில் கண்டுள்ள எனக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு வடக்கே வாடிப்பட்டி பேருந்து நிலையம், குருசாமிரெட்டியார் வகையறா, கிழக்கே சீதையம்மாள், தெற்கே பழனிசாமி கவுண்டர் வகையறா, மேற்கே எனக்கு கிடைக்கபெற்ற நடைபாதை ஆகும். இந்த எதிர் மனுதாரர்கள் / வாதிகளால் சுப்ரமணிய ஐயர் மற்றும் சேதுராமன் ஆகியோர்களுக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட வாடகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. உங்களால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில் அசல் நிறைவேற்றுதல் மனுவான E.P.27/2008ல் உள்ள எதிர்மனுதார்கள் / பிரதிவாதிகளை இந்த மனுவில் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். உயர்நீதிமன்ற மதுரை கிளையில் CRP No.1451/13 மனுவில் விபரம் குறித்து உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு எதுவும் தெரியாது. நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் பலமுறை நீதிமன்ற ஆணையர், காவல்துறை, வருவாய் துறையினர் அசல் நிறைவேற்றுதல் மனுவில் கண்ட சொத்தை வசம் எடுத்திட வந்த விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ஒரே ஒரு முறை தான் தெரியும். உங்களுக்கு சுவாதீன இழப்பு எதுவும் இல்லாத நிலையில் இந்த மனு தாக்கல் செய்திட உங்களுக்கு உரிமை இல்லை என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல. உங்களை மனு சொத்தில் இருந்து வெளியேற்றுவதற்கு முன்பே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால். இந்த மனு நிலைநிற்கத்தக்கது அல்ல, தள்ளுபடி செய்யப்படக்கூடியது என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல. ம.சா.ஆ,14ல் சொல்லப்பட்டுள்ள வெங்கிடசாமி ரெட்டி வகையறா என்பவர்கள் யார் எனற்ால் 1965ம் வருடத்தில் நாட்டாண்மையாக உள்ளவரும், வகையறாவாக கணக்கு பிள்ளை, தலக்காவல் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர்கள் ஆவார்கள். நீங்கள் சொல்வதுபோல் 1965ம வருடத்தில் நாட்டாண்மையாக இருந்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. ஆகையால் உங்களால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு சட்டப்படி செல்லத்தக்கது அல்ல. செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

(ஒம்.) திரு. T. கோகுலகிருஷ்ணன், பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி